DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 229/2021**

**அ.சா.–1**

| | |
|---|---|
| பெயர் : திருமதி. வசந்தி | கிராமம்: நாளிக்கல்பட்டி |
| க/பெ. : திரு. ராஜேந்திரன் | தாலூக்கா :சேலம் |
| வயது : 45 | தொழில்: கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 14th day of July, 2025.

( 2 முதல் 4 எதிரிகள் ஆஜர். ( எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் நாழிக்கல்பட்டியில் வசித்து வருகிறேன். செங்கல் சூளையில் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் மற்றும் மகள் உள்ளார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது மகன் கொலை செய்யப்பட்டுவிட்டார். கடந்த 5 வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் எனது மகன் வெளியே செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். நான் பாத்ரூம் சென்றுவிட்டு வெளியில் வந்து பார்த்தபோது செங்கல் சூளையில் கொட்டிகிடந்த செங்கல் கற்களுக்கு அருகில் ஒரு நபர் கிடப்பதாக பார்த்தேன். அதனால் நான் அருகில் சென்று பார்த்தபோது எனது மகன் பேச்சு மூச்சுயின்றி கிடந்தார். அவரது நெஞ்சிலும், வயிற்றின் அல்லையிலும் காயங்களுடன் கிடந்தார். அதனால் நான் ஆட்டோவை பிடித்து கொண்டு எனது மகனை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தேன். என்னுடன் எனது கணவர் மற்றும் எனது மகளும் ஆட்டோவில் வந்தார்கள். மருத்துவமனைக்கு வந்தவுடன் எனது மகனை பரிசோதித்த மருத்துவர் அவர் வரும்போதே

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

இறந்துவிட்டார் என்று தெரிவித்தார். என் மகனை யார் கொலை செய்தார்கள் என்றும், என்ன காரணத்திற்காக கொலை செய்தார்கள் என்பதும் எனக்கு தெரியவில்லை. என் மகன் எதற்காக கொலை செய்யப்பட்டார் என்பதை பின்னிட்டும் எனக்கு தெரியவில்லை. எனது மகனை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தபோது போலிசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். எனக்கும், கையில் காயம் இருந்த காரணத்தினால் நானும் மருத்துவமனையில் அன்றைய தினமே சேர்ந்து சிகிச்சை பெற்றேன். என்னை மருத்துவமனையில் வைத்து போலிசார் விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரித்தபோது நான் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் எனது புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் பின்னிட்டு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. கையொப்பம் மட்டும் வாங்கினார்கள். போலிசார் என்னிடம் ஒருமுறை விசாரித்து கையொப்பம் பெற்றார்கள். நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அல்லது காவல் கண்காணிப்பாளர் அலுவலுகத்திற்கு சென்று புகார் எதுவும் கொடுக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**<u>குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்)</u>:-**

நான் எனது புகாரிலும், போலிசார் விசரணையிலும் நாழிக்கல்பட்டி காந்திநகரில் வசித்து வருவதாகவும், இளையபாரதம் நண்பர்கள் குழு எங்கள் பகுதியில் செயல் பட்டு வருவதாகவும், அந்த குழுவில் என் மகனும், ஆரம்பத்தில்

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

ஒரு உறுப்பினராக இருந்தார் எனவும், பின்னிட்டு என் மகன் தனியாகவும், எதிரிகள் தனியாகவும் பிரிந்து எங்கள் பகுதியில் உள்ள விநாயகர் கோவிலில் விநாயகர் சிலை வைத்து விநாயகர் சதுர்த்தியை தனித்தனியாக கொண்டாடினார்கள் என்றும், 04.09.2019 அன்று காலை 10 மணியளவில் எதிரிகள் தரப்பினரும், எனது மகன் தரப்பினரும் விநாயகர் சிலை கரைப்பதற்காக தனித்தனியாக எடுத்துக்கொண்டு மேட்டூர் நோக்கி வரும்போது எங்கள் ஊர் அம்பேத்கர் நகர் மூலக்கடை அருகே இருதரப்பினரும் ஒரே இடத்திற்கு வந்ததால் ஒருவரை பார்த்து ஒருவர் பேசிக்கொண்டதில் தகராறு ஏற்பட்டது என்றும், 1ம் எதிரியை பார்த்து எனது மகன் கை நீட்டி பேசி தகராறு செய்துளளார் என்றும், அதனால் 1ம் எதிரியின் தரப்பினர் இவ்வாறு நடந்துகொண்டால் எனது மகனை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரிகள் 4ம் எதிரி கோகுல்ராசுக்கு வேண்டியவர்கள் என்றும், அவர் தலைமையில்தான் வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள் என்றும், 05.09.2019 அன்று மாலை 6 மணியளவில் நானும், எண் அண்ணன் மகன் சரண்குமாரும், எனது மகள் நிகிதாவும், எனது உறவினர் கனிமொழி மற்றும் எனது மகனும் பேசிக் கொண்டிருந்தபோது அங்கே வந்த இவ்வழக்கு எதிரிகள் 4 நபர்களும், மற்றும் 2 இளவர்களும், எனது மகனை பார்த்து எங்களைப் பார்த்தா டான்ஸ் ஆடுகிறாய், உன்னை தொலைத்துவிடுகிறோம் என்று மிரட்டிய போது நான் குறுக்கிட்டு நான் பார்த்து கொள்கிறேன் என்று கூறி சமாதானம் பேசியதாகவும், பின்பு அங்கிருந்து சென்றுவிட்டு இரவு சுமார் 7.30 மணியளவில் எனது மகன் மற்றும் எனது அண்ணன் மகன் அருகில் உள்ள சுரேஷ்குமார் என்பவர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது 1ம் எதிரி எனது மகனை கையால் அடித்தார் என்றும், அதை தடுக்க வந்த சரண்குமாரை இளவர் சரவணன் சூரி கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் மேற்படி சரண்குமாருக்கு தலை, நெற்றி மற்றும் சுண்டுவிரல்

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

ஆகியவற்றில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், இதனை பார்த்து நானும், எனது கணவரும், எனது மகளும் தடுத்தோம் என்றும், எனது கணவரை 1ம் எதிரி எட்டி உதைத்து கிழே தள்ளினார் என்றும், என்னை 1ம் எதிரி கிழே தள்ளி அவர் வைத்திருந்த கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் எனக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றும், 2 மற்றும் 3 ம் எதிரிகள் என்னையும், எனது கணவரையும் , என் மகனை காப்பாற்றிவிட கூடாது என்று பிடித்து கொண்டார்கள் என்றும், அப்போது 4ம் எதிரி ஒன்றும் நடக்காது என்று கூறி எங்களை வஞ்சகமாக ஏமாற்றி எங்கள் வீட்டிற்கு கொண்டுவந்து விட்டுவிட்டார்கள் என்றும், ஆனால் நான் எனது மகனை மீட்பதற்காக மீண்டும் அங்கே சென்றபோது 1ம் எதிரி எனது மகனை சூரிகத்தியால் இடதுபக்க அல்லையில் குத்தினார் என்றும், இளவர் சரணவன் எனது மகனின் வலது கால் முட்டியில் சூரிகத்தியால் வெட்டினார் என்றும், 2 மற்றும் 3 எதிரிகள் அதனை தடை செய்யாமல் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தில் 2 மற்றும் 3 எதிரிகளுக்கு சம்மந்தம் உள்ளது என்றும், காயம்பட்ட எனது மகன் ரத்தம் சொட்டசொட்ட அருகிலுள்ள அழகு என்கிற சுரேஷ்குமார் வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டார் என்றும், இதனை பார்த்த அருகிலுள்ள ரவிச்சந்திரன் மகன் கௌதம், கனிமொழி, என் அண்ணன் மகன் கௌதம், எனது மகள் நிக்கிதா ஆகியோர்கள் ஏன்டா திலீப்குமாரை வெட்டினீர்கள் என்று கேட்டபோது அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி அருகில் யாரும் வந்தால் உங்களையும் வெட்டிவிடுவோம் என்று அவர்களையும் மிரட்டினார்கள் என்றும், பின்னர் அங்கிருந்து 1ம் எதிரியும், இரண்டு இளவர்களும் ஓடிவிட்டார்கள் என்றும், அவர்களை தொடர்ந்து 2 மற்றும் 3 ம் எதிரிகளும் ஓடிவிட்டார்கள் என்றும், காயம்பட்ட நானும், எனது மகனும், எனது அண்ணன் மகன் சரண்குமாரும், 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

சிகிச்சைக்கு வந்தோம். எனது மகன் இறந்துவிட்டதால் அவரது உடலை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், நானும், சரண்குமாரும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றும், மல்லூர் போலிசார் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்தபோது எனது மகனை கொலை செய்த எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், போலிசார் உரிய நடவடிக்கை எடுத்து எதிரிகளை கைது செய்ய வேண்டும் என்று தெரிவித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தோம் என்றும், அதன் காரணமாக எனக்கும், எங்கள் குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு வழங்கும் பொருட்டு ஒருமாதகாலம் போலிசார் எனது வீட்டினருகில் காவல்பணியில் ஈடுபட்டார்கள் என்றும், மீண்டும் 13.09.2019 அன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், அப்போது எனது புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளையும், விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளையும் நான் அவரிடம் தெரிவித்தேன் என்றும், அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தான் உண்மை என்றும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 1ம் எதிரி வெட்டி கொலைசெய்துவிட்டார் என்ற காரணத்தினால் தான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை** (2 மற்றும் 3 எதிரி தரப்பில் )

எனக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் இருட்டு நேரத்தில், நான் செங்கல் கற்கள் மீது விழுந்ததால் ஏற்பட்டதா என்றால் ஆமாம். நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த போது மருத்துவரிடம் இதைதான் சொன்னேனா என்றால் ஆமாம். போலிசார் என்னிடம் எழுதப்படாத வெள்ளை தாளில்தான் கையொப்பம் பெற்றார்களா என்றால் ஆமாம்.

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

**<u>குறுக்குவிசாரணை</u>** (4 எதிரி தரப்பில் )

2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை தழுவிக் கொள்கிறார்.

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.